இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

புதன்கிழமை 25.02.2026

# என்ன சாதித்தார் காப்பி அடிக்க...?

தனது ஆட்சிக் காலத்து சாதனைகளை தி.மு.க. அரசு காப்பி அடிப்பதாகப் புலம்பி இருக்கிறார் பழனிசாமி. அவர் என்ன சாதித்தார்? எந்தத் திட்டம் காப்பி அடிக்கப்பட்டது என்பதை அவர் சொல்லி இருக்க வேண்டும். அப்படி ஏதாவது இருந்தால்தானே சொல்வார்?

**கலைஞர் மகளிர் உரிமைத் தொகைத் திட்டம், காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம், இல்லம் தேடிக் கல்வி திட்டம், எண்ணும் எழுத்தும் திட்டம், குறு - சிறு நிறுவனங்களுக்கு கடன் உத்தரவாதத் திட்டம், கலைஞரின் அனைத்துக் கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், உங்களுடன் ஸ்டாலின், நலன் காக்கும் ஸ்டாலின், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48, பாதம் காப்போம், இதயம் காப்போம், கலைஞர் கைவினைத் திட்டம், ஊட்டச்சத்தை உறுதி செய், மகளிர் விடியல் பயணம், கலைஞர் கனவு இல்லம், அன்புக் கரங்கள் திட்டம், அன்புச் சோலை திட்டம், தோழி விடுதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைத் திட்டம், உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத் திறனாளிகளுக்கு நேரடி நியமனம், முதலமைச்சர் கோப்பை, அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டுத் திட்டம், தொல்குடித் திட்டம், டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம், பேராசிரியர் அன்பழகனார் கல்வி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், பெருந்தலைவர் காமராசர் கல்லூரி மேம்பாட்டுத் திட்டம், அண்ணல் அம்பேத்கர் தொழில் முன்னோடிகள் திட்டம், முதலமைச்சரின் தாயுமானவர் திட்டம், முதலமைச்சரின் கிராமச்சாலை மேம்பாட்டுத் திட்டம், கல்லூரி மாணவர்களுக்கு லேப்டாப் திட்டம், உங்க கனவ சொல்லுங்க ஆகிய அனைத்தும் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முத்திரைத் திட்டங்களில் சில. இதில் ஏதாவது ஒன்றையாவது பழனிசாமி தனது ஆட்சியில் செய்து கொடுத்தாரா?**

**கழக ஆட்சியின் மிகமுக்கியமான மூன்று திட்டங்கள் என்று கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்துப் பயணம், பள்ளிப் பிள்ளைகளுக்கு காலை உணவுத் திட்டம் ஆகிய மூன்றையும் சொல்லலாம். இதில் எதையாவது தனது ஆட்சியில் செய்து கொடுத்தாரா பழனிசாமி?**

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை அறிவிக்கப்பட்ட போது அதைத் தர முடியாது என்று சொன்னவர் பழனிசாமி. ‘பொய் சொல்லி வாக்குகளை வாங்கி விட்டது தி.மு.க., மக்களை ஏமாற்றியும் அல்வா கொடுத்தும் வாக்குகளை வாங்கி விட்டார் முதலமைச்சர் ஸ்டாலின்’ என்று சொன்னார் பழனிசாமி. இப்போது அதே திட்டத்தை காப்பி அடித்து அதே பழனிசாமி சொல்லி இருக்கிறார்.

பெண்களுக்கு கட்டணமில்லா பேருந்துப் பயணம் என்பது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் போட்ட முதல் கையெழுத்து ஆகும். இதைக் காப்பி அடித்து, ‘ஆண்களுக்கும் கட்டணமில்லை’ என்று காமெடி பண்ணிக் கொண்டு இருக்கிறார் பழனிசாமி. காப்பி அடிப்பது யார்? பழனிசாமி தான்.

வாக்குறுதி என்ற பெயரால் தினந்தோறும் ஏதோ அள்ளி விட்டுக் கொண்டு இருக்கிறார் பழனிசாமி. அதை மக்கள் மதிக்கவே இல்லை, கண்டுகொள்ளவே இல்லை. ஏனென்றால் இவர் வாக்குறுதிகளை நிறைவேற்றியவரும் அல்ல. நிறைவேற்றப் போகிறவரும் அல்ல என்பது மக்களுக்கு நன்கு தெரியும்.

**ஆட்சியில் இருந்த போதே சொந்தமாக எதையும் செய்யத் தெரியாதவர்தான் இந்த பழனிசாமி.**

கொரோனா பரவுகிறது என்று தெரிந்து முன்கூட்டியே சட்டசபையை ஒத்திவைக்கச் சொன்னார் தி.மு.க. தலைவர். முதலில் பழனிசாமி மறுத்தார். அதன் பிறகு ஒத்தி வைத்தார். வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதம் ரூ.5 ஆயிரம் கொடுக்கச் சொன்னார் தி.மு.க. தலைவர். பணம் இல்லை என்று மறுத்தார் பழனிசாமி. அதன்பிறகு 2500 கொடுத்தார். பத்தாம் வகுப்பு தேர்வை ரத்து செய்யச் சொன்னார் தி.மு.க. தலைவர். அதன்பிறகுதான் ரத்து செய்தார். இ - பாஸ் ரத்து செய்யச் சொன்னார் தி.மு.க. தலைவர். அதன்பிறகுதான் ரத்து செய்தார். அரசுப்பள்ளி மாணவர்களுக்கான இடஒதுக்கீட்டை வலியுறுத்தி தி.மு.க. போராடிய பிறகுதான், ஆளுநருக்கு பழனிசாமி அழுத்தம் கொடுத்தார்.

விவசாயக் கடன் ரத்து செய்யப்படும் என்று தி.மு.க. தலைவர் சொன்னார். உடனடியாக கூட்டுறவுக் கடன்களை ரத்து செய்தார் பழனிசாமி. மக்களின் குறைகளை 100 நாளில் தீர்ப்பேன் என்று அறிவித்தார் தி.மு.க. தலைவர். உடனே செல்போனில் பேசினால் தீர்ப்பேன் என்று சொன்னார் பழனிசாமி. ஜெயலலிதாவால் ஐந்தாண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்ட 1100 என்ற திட்டத்தை தூசி தட்டி எடுத்தார் பழனிசாமி. அதனை தனது சொந்த திட்டம் போல அறிவித்தார் பழனிசாமி. இப்படி ஜெயலலிதாவின் திட்டத்தையே கபளீகரம் செய்தவர்தான் பழனிசாமி.

**2021 ஆம் ஆண்டு தேர்தலுக்கு முன்னதாக தி.மு.க. தனது தேர்தல் அறிக்கையை வெளியிட்டது. அதைப் பார்த்து அப்படியே காப்பி அடித்து அ.தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையை பழனிசாமி வெளியிட்டார். இப்படி எந்தக் கூச்சமும் இல்லாமல் சுற்றிக் கொண்டிருப்பவர்தான் பழனிசாமி.**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (23.02.2026) சென்னை, பெரம்பூர், டான் பாஸ்கோ மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டு வாரியத்தின் திட்டங்களின் மூலம் 1969 பயனாளிகளுக்கும், அரசாணை எண்.97ன் கீழ் இலவச வீட்டுமனைப் பட்டா திட்டத்தின் கீழ் 38 பயனாளிகளுக்கும், என மொத்தம் 2007 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், சு.முத்துசாமி, அர.சக்கரபாணி, பி.கே.சேகர்பாபு, முனைவர் கோவி. செழியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, கிரிராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் முனைவர் ஆ. அண்ணாதுரை, சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத் தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார். உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 10 லட்சம் பேர் திரள்கின்றனர்!

# மார்ச் 9 - திருச்சியில் தி.மு.க. மாநில மாநாடு!

## ‘மெயின் பிக்சர்’ காத்திருக்கிறது — முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கருத்து!

சென்னை, பிப். 25 -

திருச்சியில் சமயபுரம் பூச்சொரிதல் திருவிழா மார்ச் 8ந்தேதி அன்று நடைபெற இருப்பதால் தி.மு.க. மாநில மாநாடு மார்ச் 9ந்தேதிக்கு மாற்றப்பட்டுள்ளது. 9ந் தேதி - திங்கட்கிழமை அன்று ‘மெயின் பிக்சர்’ காத்திருக்கிறது என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கடந்த மாதம் நடைபெற்ற தி.மு.க. மாவட்டச் செயலாளர்கள் கூட்டத்தில், திருச்சியில் மார்ச் 8ந் தேதி அன்று 10 லட்சம் பேர் பங்கேற்கும் ‘ஸ்டாலின் தொடரட்டும், தமிழ்நாடு வெல்லட்டும்’ என்ற தலைப்பில் தி.மு.க. மாநில மாநாடு நடைபெறும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதைத் தொடர்ந்து திருச்சி சென்னை தேசிய நெஞ்சாலையில் அமைந்துள்ள சிறுகனூரில் 500 ஏக்கரில் மாநாட்டு ஏற்பாடுகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

அதன்படி மதுரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தென் மண்டல வாக்குச்சாவடி குழு உறுப்பினர்கள் மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பேசுகையில்,

**‘இப்போது நாம் காண்பிப்பது அனைத்துமே சும்மா டிரெய்லர்தான். திருச்சியில் மெயின் பிக்சர் காண்பிக்க தயாராகி கொண்டிருக்கிறோம். மார்ச் 9ந் தேதி தி.மு.க. நிர்வாகிகள் அனைவரும் திருச்சியில் திரள போகிறோம். 10 லட்சம் பேர் கூடும் மாநாட்டை தமிழ்நாடே பார்க்கபோகிறது’ என்று கூறினார்.**

இந்த பேச்சு தொடர்பான ‘வீடியோ’ பதிவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலை தளத்தில் நேற்று முன்தினம் வெளியிட்டு, ‘மார்ச் 9ந் தேதி திருச்சியில் மெயின் பிக்சர்! என்று கருத்து பதிவிட்டுள்ளார்.

# நாட்டில் பரவலாக நிலவுவது ஸ்டாலின் நல்லவர் என்ற பிம்பம்!



அமெரிக்கத் தொழிலதிபர்
பெருந்தமிழன்பர்
திரு. பால்பாண்டியன்
அன்பு நிமித்தமாய்
நேற்றென்னைச் சந்தித்தார்;
உரையாடினோம்

“டிரம்ப் ஆட்சி குறித்து...”
என்றேன்

“மதம், இனம், பொருளாதாரம்
இந்த மூன்றையும்
அந்நியர்களின் அழிப்பிலிருந்து
காப்பாற்றுவதே என் லட்சியம்
என்ற அவரது கொள்கையை
அமல்படுத்தும் அமளியால்
கொந்தளிப்பில் இருக்கிறது நாடு

தமக்குப் பாதுகாப்பு
அமைப்புகள் வேண்டும்
என்ற மனநிலைக்கு
அமெரிக்க வாழ் இந்தியர்கள்
ஆட்படுகிறார்கள்

இந்தியர்களுக்கு ஆபத்து
டிரம்ப்பா? AI தொழில்நுட்பமா?
என்ற கேள்வி
அச்சத்தோடு அலைகிறது”

“சரி;
தமிழ்நாட்டுத்
தேர்தல் முடிவுகளை
எப்படி அனுமானிக்கிறீர்கள்?”

இப்போதிருக்கும் கூட்டணிகள்
எதிர்பாராத மாற்றங்களின்றி
இப்படியே நீடித்தால்
தி.மு.க மீண்டும்
ஆட்சிக்கு வருவதற்குக்
கொஞ்சம் கூடுதல்
வாய்ப்புகள் உள்ளதாக
அனுமானிக்கிறேன்..”

“சமூக விஞ்ஞானப்படி
சொல்ல முடியுமா?”

“ஒன்று, பிம்பம்
ஸ்டாலின் நல்லவர்
என்ற பிம்பம்
நாட்டில் பரவலாக நிலவுகிறது

இரண்டு, நம்பிக்கை
நிலைத்த கட்சியாக,
நீடித்த திட்டங்கள்
கொண்ட கட்சியாகத்
தி.மு.க கணிசமாக
நம்பப்படுகிறது
மூன்று, உழைப்பு
ரசிகர்களுக்கும்
தொண்டர்களுக்கும்
வேறுபாடு உள்ளது.
தி.மு.க தொண்டர்கள்
அனுபவம் மிக்க
உழைப்பாளிகள்”

சற்றுநேரம் இருவரும்
சொற்களின்றிப்
புன்னகைத்துக்கொண்டே
இருந்தோம்!



**கவிப்பேரரசு வைரமுத்து**

## காவேரிப்பாக்கத்தில் புதிய நியாய விலை கடை திறப்பு!

*இராணிப்பேட்டை, பிப். 25 -*

*இராணிப்பேட்டை மாவட்டம் காவேரிப்பாக்கம் பேரூராட்சியில் புதிய நியாய விலைக் கடையை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி திறந்து வைத்தார்.*

*நிகழ்ச்சியில் பேரூராட்சி மன்றத் தலைவர் பாஸ் என்கிற நரசிம்மன், ஒன்றியச் செயலாளர்கள் ஒச்சேரி பாலாஜி, தெய்வ சிகாமணி, பொதுக்குழு உறுப்பினர் சி.மாணிக்கம், காவேரிப்பாக்கம் பேரூர்க் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.*



சென்னை மேத்தா மருத்துவமனையின் குடும்பநல மருத்துவரும், மருத்துவ எழுத்தாளருமான கலைமாமணி டாக்டர் எஸ்.அமுதகுமார் சகோதரர் மகன் அ.சதிஷ்குமார் – கா.திவ்யா திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராசேந்திரன், பத்மபூஷண் தொழிலதிபர் நல்லி குப்புசாமி செட்டியார், நடிகர் – இயக்குநர் கே.பாக்யராஜ், நடிகை பூர்ணிமா பாக்யராஜ், தொழிலதிபர்கள் தனபால் உடையார், தனசேகரன், ஸ்டாலின் சின்னதுரை, கோல்டன் காளியப்பன், சுரேஷ், ஜே.ரவிச்சந்திரன் மற்றும் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.